பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 11 சனிக்கிழமை 24.03.2024 கதிர் 138

## இது ரகசியம் அல்ல!

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை அனேகமாக எல்லோரும் மறந்துவிட்ட நிலைதான். தன்னைப் பிணையில் விடக்கேட்டு அண்மையில் அவர் மேல் நீதிமன்றத்தைநாடியிருந்தார். ஆனால் அங்கும் அவரது பிணைவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அவர் கைது செய்யப்பட்டு பல வாரங்கள் கடந்துவிட்டன. ஆனாலும் அவருக்குப் பிணை வழங்க கீழமை நீதிமன்றங்கள் தயாராக இல்லை. அதனாலேயே அவர் மேல் நீதிமன்றத்தை நாடினார். ஆனால் அங்கும் அவருக்குச் சார்பான நிலை ஏற்படவில்லை.

இந்த நிலையில் அவருக்குச் சார்பாக நீதிமன்றத்தில் முற்பட்டு வாதாடப்போவதில்லைஎன்றுசட்டமா அதிபர் அறிவித்திருக்கிறார். ☞ 2

### வரவுள்ள தேர்தலில்

# தீர்வு குறித்து ஜனாதிபதி வேட்பாளர்கள் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும்

### மீண்டும் ரெலோ தலைவரான பின்னர் செல்வம் வலியுறுத்து

எந்தத் தேர்தலை சந்திப்பதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்தால் அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழர் தரப்பிற்கு என்ன செய்யப்போகிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ☞ 2

## இலங்கையர்கள் அனைவருக்கும் சம அந்தஸ்து கிடைக்கவேண்டும்

இலங்கை மக்கள் அனைவருக்கும் சம அந்தஸ்து கிடைக்கவேண்டும் என்று நெதர்லாந்து தூதுவர் பொனி ஹொப்ச் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர விபத்து மற்றும் சிகிச்சை பிரிவின் புதிய கட்டிடத்தை மக்கள் ☞ 8

# வடக்கில் நேற்று மட்டும் மூன்று படையினர் கைது

### போதைப் பொருள், ஆயுதக் குற்றச்சாட்டுகளில்

வடமாகாணத்தில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் மூன்று படையினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து போதைப் பொருள் மற்றும் துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா படை முகாமில் பணி புரியும் படைச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று வவுனியா பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

அங்குனுகொல பலஸ்ஸ பகுதியில் உள்ள அந்தச் சிப்பாயின் வீட்டில் சோதனை நடத்திய அந்தப் பகுதிப் பொலிஸார் வீட்டின் சமையலறையில் வைக்கப்பட்டிருந்த 235 தோட்டாக்களைக் கைப்பற்றினர். ரி- 56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் அந்தத் தோட்டாக்கள் தனது கணவனாலேயே அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று மனைவி தெரிவித்ததன் அடிப்படையில் வீட்டின் உரிமையாளரான சிப்பாய் வவுனியாவில் கைது செய்யப்பட்டார்.

பலஸ்ஸ பொலிஸார் வவுனியா தரைப் படையினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சிப்பாய் வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை இரு மாவட்டப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - மாவட்டம், காரைநகரில் நேற்று கடற்படையினர் இருவர் உள்ளிட்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 4 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் ☞ 2

## மைத்திரியின் கூற்றுப் பற்றி விசாரணை நடத்தவேண்டும்

### மனோ கணேசன் வலியுறுத்து

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனக்கு உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரியை தெரியும் என பகிரங்கமாக கூறுகிறார். இது ஓர் அதிர்ச்சித் தகவல் குண்டு. பொலிசார் உடனடியாக மைத்திரிபாலவை அணுகி, உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை வாக்குமூலமாக பெறவேண்டும். அதுபோல், இத்தனை நாள் ஏன் இந்த தகவலை அவர் மறைத்துவைத்தார் என்ற கேள்விக்கும் பதிலை வாக்குமூலமாக பெறவேண்டும். இந்த இரண்டு வாக்கு மூலங்களின் அடிப்படையில் உடனடியாக ஸ்ரீலங்கா பொலிஸ் விசாரணைகளை முடுக்கி விட்டு, குற்றவாளிகளை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் ☞ 2

### உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த

## தாக்குதலுக்கு யார் காரணம் என்பது மூன்று வாரங்கள் முன்பே தெரியும்

### திடீர் 'பல்டி' அடித்தார் மைத்திரி

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை உண்மையாகச் செய்தது யார் என்பது தமக்கு தெரியும் எனத் தாம் கூறியது, மூன்று வாரங்களுக்கு முன்னர் கிடைத்த தகவலுக்கமையவே என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுக்காலை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் இரகசிய சாட்சி வழங்க தாம் எதிர்பார்த்துள்ளேன். பகிரங்கமாக நீதிமன்றத்தில் சாட்சி வழங்கினால், தனது உயிருக்கும் ☞ 8

## பெண் பிள்ளைகளின் பாலியலுக்கான வயதெல்லை மாற்றத்துக்கு தடங்கல்

### கலந்துரையாட நீதி அமைச்சர் தயார்

குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க முன்வைக்கப்பட்ட திருத்தங்களை நிறுத்திவைக்க நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச இணங்கியுள்ளார்.

தண்டனை சட்டக் கோவைக்கு அமைவாக, 16 வயதிற்குட்பட்ட சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது உடல் ரீதியான தொடர்புகளை வைத்திருந்த ஒருவருக்கு தண்டனை வழங்கப்படும். எனினும், 14 முதல் 16 வயதிற்கு இடைப்பட்ட சிறுமிகள் தங்களின் விருப்பத்துடன் தொடர்புகளை பேணிய தகவல்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன. கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய, குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க அமைச்சுக்கு பரிந்துரைகள் ☞ 2

## மைத்திரியை உடனடியாக கைது செய்தாகவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை உடனடியாக கைது செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி மத்திய கொழும்பு அமைப்பாளர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார். .

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களை நீதிமன்றம் உத்தரவிட்டாலோ அல்லது கேட்டாலோ வெளியிடத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பலதடவைகள் நீதிமன்றம் சென்ற ☞ 2

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு குறித்த

## மைத்திரியின் கருதுத்துக் குறித்து விசாரணை நடத்தும்படி உத்தரவு

உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து விசாரணை நடத்தும்படி பொலிஸ்மாஅதிபருக்குத் தான் உத்தரவிட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரி யார் என்பது தனக்கு தெரியும் என்றும், நீதிமன்றம் அனுமதிக்கின்றபோது அதனை வெளிப்படுத்துவதற்குத் தான் தயாராக இருக்கிறார் எனவும் மைத்திரிபால குறிப்பிட்டிருந்தார். ☞ 2

## மீனவர் விடுவிப்பு இன்றேல் தேர்தலைப் புறக்கணிப்போம்

### இராமேஸ்வரம் மீனவர்கள் அதிரடி அறிவிப்பு

இலங்கைச் சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 37 பேரை உடனடியாக விடுதலை செய்ய கோரி நேற்று முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை கைது செய்யப்பட்ட மீனவர்களைப் படகுடன் விடுதலை செய்யாவிட்டால் வரும் மக்களவைத் ☞ 8

## பயிற்றுவிக்கப்படும் 100 தாதியரில் 40பேர் வெளியேறிச் செல்கின்றனர்

### குறைப்படுகிறார் ஜனாதிபதி ரணில்

நாட்டில் பயிற்றுவிக்கப்படும் 100 தாதியர்களில் 30-40 பேர்வரையிலானவர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றனர் என்றும், இதே நிலை தொடர்வது சிறந்ததல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

உலகின் உயர்வான சுகாதார சேவையை கொண்டிருக்கும் எமது நாட்டின் சுகாதார துறையை மேம்படுத்தி அதனை பொருளாதார ☞ 2

## நேர்மையான அரசியல்வாதி என்றால் மைத்திரி உண்மையைச் சொல்லட்டும்

### பிள்ளையான் ஆவேசம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு அவர் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா? என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு எனவே அவர் துணிந்த நேர்மையான அரசியல் தலைவராக இருந்தால் குற்றவாளி யார் என்பதை வெளிப்படையாக விரைவாக வெளிப்படுத்தவேண்டும் என்பது எனது கோரிக்கை என பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்ரர் படுகொலை இனமதநல்லிணக்க அறிதலும் புரிதலும் எனும் ஆய்வு நூல் வெளியிட்டு விழா நேற்று அஞ்சனா மண்டபத்தில் இடம்பெற்றது. ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

வெள்ளிக்கிழமை நீதிமன்றத்திற்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் கடனுக்குப் பொருள்கொள்வனவு வசதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத இரண்டு இந்திய நிறுவனங்களிடம் இருந்துமருந்துகளைக்கொள்வனவு செய்ததன்மூலம்மனிதஉரிமைகள் மீறப்பட்டுள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் அமைச்சருக்காக முற்படப்போவதில்லை என்ற அறிவிப்பை பிரதி சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

ஆக, மொத்தத்தில் ஆளும் தரப்பு கெஹலியவை அடியோடு கைவிட்டுள்ளது. வழக்கமாக அரச அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் தொடர்பான வழக்குகளில் சட்டமா அதிபரே நீதிமன்றில் முன்னிலையாவது வழக்கம். அவரதுதிணைக்களத்தின் சார்பில் அனுப்பப்படும் அதிகாரிகள் வழக்குகளை நடத்துவார்கள். அரசு சார்பில் செய்யப்பட்ட ஒரு வேலைக்காக அதிகாரி ஒருவரோ அரசியல்வாதி ஒருவரோ குற்றஞ்சாட்டப்படுமிடத்து இந்த நடைமுறை பின்பற்றப்படும். அதேநேரம், அந்தக் குற்றம் அந்த அதிகாரியினதோ அல்லது அரசியல்வாதியினதோ தனிப்பட்ட செயல் எனக் கருதின் அதிலிருந்து சட்டமா அதிபர் திணைக்களம் விலகிக்கொள்ளும்.

கெஹலியவின் வழக்கில் இப்போது அதுதான் நடந்திருக்கிறது. சட்டமா அதிபர் திணைக்களம் தான் இந்த வழக்கில் முன்னாள் அமைச்சருக்காக வாதாடப் போவதில்லை என்று விலகிவிட்டது. இ-துவே கிட்டத்தட்ட ஆளும் தரப்பால் அமைச்சர் முற்றாகக் கைவிடப்பட்டுள்ளார் என்பதற்கான அறிகுறிதான். அவர் இனித் தன்னுடைய பணம் மற்றும் சட்டத்தரணிகள் மூலமே இந்த வழக்கிலிருந்து வெளிவர முயற்சிக்கவேண்டும். ஓரிரு வாரங்களுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ச சிறைக்குச் சென்று கெஹலியவை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறிவிட்டு வந்தார். அதன் பின்னரும் கெஹலியவின் நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்பதே தற்போதைய நிலை.

கெஹலியவுக்காக எதையாவது செய்யப்போய் தனது மிஸ்டர் கிளீன் பிம்பத்தைச் சேதப்படுத்திக்கொள்ள ரணில் தயார் இல்லை, அதுவும் தேர்தல் வரப்போகிற நேரத்தில் அது பற்றிச் சிந்திக்கக்கூட முடியாது என்கின்றன ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள். இனிமேல் இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க கெஹலியவே முயற்சிக்கவேண்டும். ஆளும் தரப்பின் ஒத்துழைப்பு இன்றி அவரால் இந்த வழக்கிலி-ருந்து வெளியே வரமுடியுமா என்பது கேள்விக்குறிதான். ஒருவேளை வரவிருக்கும் தேர்தல்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அப்போது அவரது நிலமை இன்னும் மோசமாகிவிடும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தீர்வு குறித்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இன்று (23.03) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னதாக, ரெலோவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மீண்டும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இது தொடர்பான அறிவிப்பை கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி விடுத்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 11 ஆவது தேசிய மாநாடு இன்று வவுனியா மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதையொட்டி கட்சியின் முக்கிய பதவி நிலைகள், தலைமைக்குழு, நிர்வாக குழு, மத்திய குழு என்பவற்றுக்கான தெரிவு இடம்பெற்றது. வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் இருந்தும் பொதுக்குழு உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் தலைவராக தொடர்ந்தும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், செயலாளர் நாயகமாக நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா), தேசிய அமைப்பாளராக பிரசன்னா இந்திரகுமார், உப தலைவராக ஹென்றி மகேந்திரன், நிதிச் செயலாளராக சுரேன் குருசாமி, நிர்வாக செயலாளராக விந்தன் கனகரத்தினம், இளைஞரணி செயலாளராக செந்தில்நாதன் மயூரன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்ததாவது:

எந்தத் தேர்தலை சந்திப்பதற்கும் நாம் தயாராகதான் இருக்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்தால் அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் இனப்பிரச்சினை சார்ந்து தமிழர் தரப்பிற்கு என்ன செய்யப்போகிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். வெறுமனே கருத்துச் சொல்லிவிட்டு ஏமாற்றுகின்ற நிலைமையினை இம்முறை மக்கள் ஏற்க மாட்டார்கள். அதற்கு உடந்தையாக நாங்களும் இருக்கமாட்டோம்.

பொதுவேட்பாளர் விடயத்தை நாம் சரியாகக் கையாளவேண்டும். ஒருவரை நிறுத்திவிட்டு சொற்ப வாக்குகளைபெறும்நிலைஇருந்தால் ஒட்டுமொத்ததமிழினத்தின்மானமே போய்விடும். எனவே சரியான நெறிப்படுத்தலின் ஊடகவே அந்த விடயத்தைச் செய்யவேண்டும். நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி எமது மக்களும், நாங்களும் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம்.

ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். ஐ.நாவுக்கு கடிதம் எழுதுவது, பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுவது என்பவற்றை ஒற்றுமையாகச் சேர்ந்துசெய்தோம். எமது மாநாட்டில் வலுவான ஒரு கோரிக்கையினை முன்வைக்க இருக்கின்றோம். எங்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்று ஏளனப்படுத்தும் விமர்சனத்தை தொடர்ச்சியாகச் சந்திக்கின்றோம். ஒற்றுமை இல்லை எனில் நாம் வெற்றி பெற முடியாது.

எனவே அரசியல் கதிரைகளுக்காக உசுப்பேத்தும் வசனங்களை மாத்திரம் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அனைவரையும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும்.

எம்மை பொறுத்தவரை இனப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால், எமது மண்ணை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் நாம் ஓர் அணியிலே இருக்கவேண்டும். அப்படியிருந்தாலே இலங்கை ஆட்சியாளர்கள் எம்மைத் திரும்பி பார்க்கும்நிலைமைஏற்படும். அத்துடன் சர்வதேசத்தின் பார்வையினையும் பெறமுடியும். அப்போதுதான் தென் இலங்கை எங்களைப் பார்த்து அச்சப்படும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் அரசுக் கட்சியினை நாம் ஒதுக்கிவிட முடியாது. பிரச்சினை தொடர்ந்து இருக்கின்றது. அவர்களையும் இந்த ஒற்றுமைக்குள் நாங்கள் கொண்டு வரவேண்டும். ஆனால் பொதுச் சின்னம் என்பதே எமது கருத்து. பொதுச் சின்னமாக குத்துவிளக்கு அமைந்திருக்கின்றது. அவர்களோடு பேசி பொதுச் சின்னத்தின்கீழ் அணிதிரள்வதற்கான முயற்சியினை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்ளுவோம். தனிப்பட்ட கட்சியின் கீழ் எமது ஒற்றுமை இருக்காது எனத் தெரிவித்தார்.

## மைத்திரியை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஈஸ்டர் குற்றவாளிகளை சட்டத்தின் தண்டனையில் இருந்து தப்பிக்க உதவி புரிந்துள்ளார்.

இது தேசத்துரோகக் குற்றமாகும். அவரைக் குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றில் முன்னிறுத்த வேண்டும். இலங்கையின் அரசமைப்புக்கு அமைவாக பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்களை அல்லது தாக்குதல்களுக்கு காரணமானவர்களை மறைப்பது தண்டனைக்குரியதாகும். அந்த அடிப்படையில் உடனடியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் - என்றார்.

இதேவேளை, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன குறிப்பிட்டுள்ள தகவல்களால் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார்

இலங்கையின் அரசியல் இறையாண்மைக்கு மாபெரும் பங்கம் ஏற்பட்டுள்ளது. அவர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் உண்மை எனில், குற்றச் செயலையும், குற்றவாளிகளையும் மறைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிரிசேன உடன் கைது செய்யப்படவேண்டும்.

அத்துடன் அவரிடம் சரியான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய சூத்திரதாரிகளுக்கு கடுமையான தண்டனையை வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், நீதிபதியினால் தண்டனை உத்தரவை பிறப்பிக்கும் வகையில், தண்டனை கோவையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டது. எனினும், சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதனை இரத்து செய்யுமாறு சிவில் அமைப்புகளும் மகளிர் அமைப்புகள் சிலவும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

அத்தகைய தரப்பினருக்கு மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலுக்குப் பிறகு திருத்தம் அவசியமா, எவ்வாறான திருத்தம் மெற்கொள்ளப்படவேண்டும் என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரியின் இந்தக் கருத்துத் தொடர்பாக விசாரணை நடத்தும்படி தான் உத்தரவிட்டிருக்கிறார் என்றே அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ்மா அதிபருக்கு பணித்துள்ளேன். அவருடைய விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் அடுத்த கட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்றார்.

## நேர்மையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடாத்தியவர்களை தெரியும் என தெரிவித்த கருத்தை நான் ஊடகங்களில் பார்த்தேன் ஒரு சாதாரண மனிதனை போல முன்னாள் ஜனாதிபதி பேசுகின்றார். இந்த குண்டு வெடிப்பு இடம்பெறுகின்ற போது அவர் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார் தலைவருடைய பொறுப்பு யாராக இருந்தாலும் தேடி கண்டுபிடித்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அவர் அதைவிட்டுவிட்டு இப்போது இரகசிய வாக்குமூலம் கொடுக்க வேண்டும் என கருத்துக்களை சொல்லுகின்றார் எனவே ஒருவேடிக்கையான மனிதரை இந்த நாட்டு அரசியலுக்கு கொண்டுவந்துள்ளோம் என்பதையிட்டு நாங்கள் வெட்டகப்படவேண்டும்.

ஏன் அவர் இரகசிய வாக்குமூலம் தேவை என்கின்றார்? யாருக்கு அச்சப்படுகின்றார், அப்படியென்றால் இந்த குண்டு வெடிப்பிற்கும் அவரும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றாரா? என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டு ஆகவே அவர் ஒரு துணிந்த நேர்மையான அரசியல் தலைவராக இருந்தால் யார் என்பதை வெளிப்படையாக விரைவாக ஊடகங்களில் வெளிப்படுத்தவேண்டும் என்றார்.

## பயிற்றுவிக்கப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சிக்காக பயன்படுத்திக்கொள்வது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நெதர்லாந்து அரசின் ட்ரைவ் (ம்யூணூராசி) இலகுக் கடன் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை ஆரம்ப வைத்தியசாலையின் அவசர விபத்து மற்றும் சிகிச்சை பிரிவின் புதிய கட்டடத்தை வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்கு கையளித்த நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத்தெரிவித்தார்.

வைத்திய மற்றும் தாதியர் சேவைக்காக பயிற்றுவிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திடம் தான் கோரிக்கை விடுத்திருக்கிறார் எனவும், அதற்கான வசதிகளை மேம்படுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேநேரம் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை மற்றும் பசுமை பல்கலைக்கழகத்திற்கான வைத்தியசாலை ஒன்றை நடத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் லயிசியம் வைத்தியசாலையும் அதற்கான கோரிக்கையை விடுத்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களையும் வைத்திய துறைக்குள் உள்வாங்கி நவீன வைத்தியமுறைமைகளைமுன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

யாழ். பருத்தித்துறை வைத்தியசாலைக்கு புதிய கட்டடமொன்றை நிர்மாணித்தமைக்காக நெதர்லாந்து அரசுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நன்றி தெரிவித்தார்.

பருத்தித்துறை வைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக்காக நெதர்லாந்தின் இலகுக் கடன் முறையின் கீழ் 4 பில்லியன் ரூபா வழங்கப்பட்டிருப்பதோடு, அதனால் வைத்தியசாலையின் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்து புதிய கட்டிடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதனை மேற்பார்வை செய்த பின்னர் வைத்தியசாலை பணிக்குழுவினருடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டும்.

கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு கடுவாபிடிய, மட்டக்களப்பு ஷியொன் தேவாலயங்களிலும், கொழும்பு நட்சத்திரவிடுதிகளிலும் கொல்லப்பட்ட அப்பாவிகளின் பெயரால் இதை நான் கூறுகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்ல வளாகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதுபற்றி தெரிவித்ததாவது:

நீதிமன்றம் கேட்டால், தான் உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை தருவேன் எனவும், அந்தத் தகவல்களை நீதிபதிகள் இரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டும் எனவும் கூறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின், மூளையை பரிசோதனை செய்யவேண்டும் என நான் நினைக்கிறேன்.

நீதிமன்றம் இவரை தேடி வந்து கோராது. இவர்தான் பொலிஸாரைத் தேடிச் சென்று தகவல்களை வழங்கவேண்டும். குற்றவாளி பற்றிய தகவல்களை அறிந்த இவர் இதுபற்றி இதுவரை மௌனமாக இருந்தமை குற்றமாகும்.

தான் தரும் தகவல்களை நீதிபதிகள் இரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டும் என ஏன் இவர் கூறுகிறார் என எனக்கு விளங்கவில்லை. பொதுமக்களின் வரிப்பணத்தில் பாதுகாப்பு பெற்று வாழும் இவர் யாரை கண்டு பயப்படுகிறார் எனவும் எனக்குத் தெரியவில்லை.

இதுபற்றிய ஆணைக்குழுவில் சாட்சியம் அளித்தபோது ஏன் உண்மைத் தகவல்களை கூறவில்லை என்பதற்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதில் கூறி ஆக வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை இதுவரை மறைத்துவைத்தமை, மைத்திரிபால சிறிசேனவை பிடித்த ஒரு குற்றவியல் நோய். இந்த நோய் இலங்கை பொலீசுக்கும் வந்துவிடாமல் பொலிஸ் துறை அமைச்சர் டிரான் அலஸும், பொலிஸ் மாஅதிபரும் கவனமாக செயலாற்ற வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# சித்தன்கேணி கணேசா வித்தியாசாலையின் புதிய விளையாட்டு மைதானம் திறப்பு விழா

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் புதிய விளையாட்டு மைதானம் திறப்பு விழாவும் இல்ல விளையாட்டுப் போட்டியும் வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் திருமதி கலைவாணி அருள்மாறனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சங்கானை கோட்ட கல்வி அதிகாரி நோபேட் உதயகுமார் பிரதம விருந்தினராகவும்,

முன்னாள் வித்தியாசாலை அதிபரும், தற்போதைய மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபருமான பா.பாலசுப்ரமணியம் சிறப்பு விருந்தினராகவும், கனடாவில் இருந்து வருகை தந்த உலக சித்தன்கேணி ஒன்றிய உறுப்பினரும் ஓய்வு பெற்ற கணக்காய்வாளரும் பழைய மாணவருமான சு.உமாசுதன் மற்றும் ஓய்வு நிலை பொறியியலாளரும் பழைய மாணவருமான பூ.சிவநேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

சித்தன்கேணியில் நீண்ட காலமாக பொது விளையாட்டு மைதானம் இல்லாத குறையை கனடா சித்தன்கேணி ஒன்றிய மக்களின் முயற்சியால் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகம், ஸ்ரீகணேசா வித்தியாசாலை மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச்சங்க பாலர் பாடசாலைக்கு பொதுவான ஒரு விளையாட்டு மைதானமாக சிங்கப்பூரில் வசிக்கும் திருமதி சரோஜினி பரமநாதன் தமது பெற்றோர்களான அமரர்கள் முத்துலட்சுமி அப்பையா நினைவாக வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாசாலையில் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற பிரகலாதன் பிரணவன், நாகஷரூபன் பிரணவி ஆகிய இருவருக்கும் 14.03.2023 வியாழக்கிழமை உலக சித்தன்கேணி ஒன்றிய உறுப்பினர்களான சி.அருணேஸ்வரன் (சிட்னி) மற்றும் க. குமரன் (பாரிஸ்) ஆகியோரால் இரண்டு புதிய துவிச்சக்கர வண்டிகள் பரிசாக வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

அத்துடன் வெட்டுப்புள்ளிக்கு மிக நெருங்கிய இரு மாணவர்களுக்கு தலாஷரூபா 5 ஆயிரம் சித்தன்கேணி உலக ஒன்றிய உறுப்பினர்களால் வழங்கியும் ஊக்குவிக்கப்பட்டது. (05)





# திருட்டுச் சந்தேகநபரை தேடிய கடற்படை ட்ரோன்

## கல்முனையில் சுவாரஸியம்

(பாறுக் ஷிஹான்)

திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஆற்றில் பாய்ந்த நிலையில் தேடுதல் நடவடிக்கையில் கல்முனை தலைமையக பொலிஸார் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அண்மையில் வீதியில் சென்ற பெண் ஒருவரின் தங்க மாலையை அறுத்த சந்தேக நபர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக பொலிஸ் குழு நற்பிட்டிமுனை பாண்டிருப்பு எல்லை பகுதிக்கு சென்றுள்ளது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை முற்பகல் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சுமார் 40 வயதுடைய சந்தேக நபரை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு தயாரான நிலையில் சந்தேக நபர் தம்வசம் இருந்த தங்க மாலையை ஆற்றில் எறிந்து தானும் அதில் குதித்து மாயமாகியுள்ளார்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சந்தேக நபரை தேடும் முயற்சியில் ஈடுபட்டதுடன் பின்னர் கடற்படையினர் ட்ரோன் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையை தொடர்ந்து வருகின்றனர். மேலும் சம்பவ இடத்திற்கு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் பொலிஸார் விசாரணைகளுடன் மாலை வரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (05)

# 'சமானத்துக்காக நீர்' என்னும் கருப்பொருளில் நீர் தின விழா

உலக நீர் தின விழா வெள்ளிக்கிழமை 'சமானத்துக்காக நீர்' எனும் தொனிப்பொருளில் இரத்மலானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மையத்தின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்கவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில், பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பேராசிரியர் எஸ்.டீ. தர்மரத்ன சிறப்புரையாற்றினார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு நாடாளவீய ரீதியில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஓவியம், கட்டுரை, மேடை நாடகம் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையில் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய ஊழியர்களுக்கு தங்க நாணயமும், கடந்த க.பொ.த உயர் தர பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.சீ.எம்.நபீல், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் ருவான் லியனகே உட்பட அமைச்சின் உயரதிகாரிகள், மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர

.(05)

# உலக நீர் தினமும் பொங்கலும் தீர்த்த அபிஷேகமும் கந்தளாயில்





உலக நீர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை,கந்தளாய் விவசாய திணைக்களமும் தம்பலகாம விவசாயிகளும் இணைந்து நடத்திய பொங்கலும் தீர்த்த அபிஷேகமும் வெள்ளிக்கிழமை காலை 11.45 மணிக்கு தம்பலகமம் கோயிலடியில் இடம்பெற்றது.

தம்பலகாம விவசாயிகள் செம்மேர் இனங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடைச் செய்திருந்தன.

இந்த நிகழ்வின் அதிதியாக கந்தலாய் நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் சுரவீர, கந்தளாய் நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. சிவதர்ஷினி, அம்பலகாம பிரதேச செயலாகர் ஜெய கௌரி ஸ்ரீபதி திருவண்ணாமலை விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள், விவசாயிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டவுடன் பிச்வெளி ஆற்று பகுதியில் நீர் மாதாவுக்கு தீர்த்த அபிஷேகமும் செய்யப்பட்டது.

(05)

# ரி – 56 ரக ரவைகள், ஹெரோயினுடன் வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியாவில் ரி - 56 ரக ரவைகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, செட்டிக்குளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது

செட்டிக்குளம் காந்திநகர் பகுதியில் ரி56 துப்பாக்கி ரவைகள் 13 உம் 1005 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் செட்டிக்குளம் காந்தி நகர் பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05 - 100)

# பழைய மாணவர் ஒன்று கூடல்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) மாணவர்களால் 'நமது பாடசாலையை நாமே கட்டி எழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்நிகழ்விற்கு சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர் ஏற்பாடு குழுவினர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மைத்திரியின் சர்ச்சை

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுவெடிப்புக்களுக்கு யார் காரணம் என்பது தனக்குத் தெரியும் என்று முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. இதுவரையில் உண்மையை மறைத்தமைக்காக அவரைப் பிடித்து சிறையில் அடைக்கவேண்டும் என்பது உட்பட பல்வேறு விமர்சனங்களும் அவரது கருத்துக்கு எதிராக நேற்றுக் கொந்தளித்தன.

இருப்பினும், தனக்கு அந்த விவரங்கள் மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் தெரியவந்தன என்றும் அதற்கு முன்னர், அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்தொடர்பாகஅவருக்குஎதிராகநீதிமன்ற விசாரணைகள் நடந்தபோது இந்த உண்மை பற்றித் தனக்குஎதுவும்தெரிந்திருக்கவில்லைஎன்றும்நேற்று மீண்டும்கருத்துத்தெரிவித்துச்சமாளித்திருக்கிறார் மைத்திரி. அப்படிச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு அவருக்கு எதிரான கருத்துக்களின் ஆவேசம் அவரைத் தள்ளிவிட்டுள்ளன.

மைத்திரி அரசுத் தலைவராக இருந்தபோதுதான் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் நடத்தப்பட்டன. முஸ்லீம் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய அரசுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இலங்கை முஸ்லிம்கள் சிலரினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசாரணைகளில் அறிக்கையிடப்பட்டது. அது தொடர்பான வழக்கு இன்னமும் நடந்து வருகின்றது. இருப்பினும் இந்தக் குண்டுவெடிப்புக்களைத் தடுத்திருக்க முடியும் என்றபோ–தும் பாதுகாப்பு அமைச்சர் என்கிற வகையில் அந்தக் கடமையிலிருந்து முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால தவறிவிட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டும் இருந்தது. இந்தத் தவறுக்காக அவர் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்தும் இருக்கின்றது.

இந்த நிலையிலேயே மைத்திரி, தாக்குதலுக்குக் காரணமானவர்கள் யார் என்பது தனக்குத் தெரியும் என்று கூறியிருந்தார். நீதிமன்றத்தில் இரகசியச் சாட்சியமாக அதனை வழங்கத் தான் தயார் என்றும் பகிரங்கமாக அதனைத் தெரிவித்தால் தனது உயிருக்கும் குடும்பத்தினரின் உயிருக்கும் ஆபத்து என்றும் அவர் இப்போது தெரிவித்திருக்கின்றார். தாக்குதலுக்குக் காரணமானவர்கள் யார் என்பது மைத்திரிக்குத் தெரிந்திருந்தால் இதுவரை அவர் ஏன் அதனைப் பொலிஸாரிடமோ நீதிமன்றத்திடமோ தெரிவிக்கவில்லை என்று சரமாரியான கேள்விகள் அவரை நோக்கி எழுப்பப்பட்டதுமே அவர் இந்த விளக்கத்தை வழங்கியுள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவருக்கான முழுப் பாதுகாப்புடன் இருக்கும் அவருக்கே உயிர் அச்சுறுத்தலைஏற்படுத்தக்கூடியளவுக்குப்பலம்மிக்க நபர்கள் யார் என்பது பெரும் கேள்விக்குரியது. அப்படிப்பட்டவர்கள் தொடர்ந்தும் சுதந்திரமாக இருப்பது முழு இலங்கைக்குமே தீங்கானது. எனவே தனக்குத் தெரிந்த உண்மைகளை உடனடியாக பொலிஸாரிடமோ நீதிமன்றத்திடமோ வெளிப்படுத்தி இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியதுதான் ஒரு குடிமகனாகவும் முன்னாள் அரசுத் தலைவராகவும் மைத்திரியின் கடமை. அதைவிடுத்து ஊடகங்கள் மூலம் சர்ச்சைகளைக் கிளப்பி அதற்கூடாக அரசியல் லாபம் தேடுவதுதான் அவரது நோக்கமாக இருப்பின் அதற்காகவும் அவர் தண்டிக்கப்படவேண்டும்.

# நீரிழிவு நோய் பாதங்களை பாதிப்பது ஏன்?






கு.கணேசன்

எண் சாண் உடம்பையும் தாங்குவது, பாதங்கள். ஆனால், அந்தப் பாதங்களைப் பாரமரிப்பதற்கு நாம் எத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறோம்? யோசித்துப் பாருங்கள். முகத்துக்குத் தருகிற முக்கியத்துவத்தைப் பாதங்களுக்கு நாம் தருவ–தில்லை என்பதுதான் உண்மை. பாதங்களைப் பராமரிப்பதன் மூலம் பல நோய்களில் இருந்தும் நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள முடியும். அதிலும் சர்க்கரை நோய் இருப்பவர்களுக்குப் பாதப் பரா–மரிப்பு என்பது மிக மிக அவசியம்.

### என்ன காரணம் தெரியுமா?

நீரிழிவு நோய் இல்லாதவர்களோடு ஒப்பிடும்போது, நீரிழிவு நோய் இருப்பவர்களு–க்குக் கால் பாதிப்பு ஏற்படுகின்ற வாய்ப்பு 15 மடங்கு அதிகம். இன்னும் சொல்லப்போனால், நீரிழிவு நோயாளிகளுக்கு 85 சதவீதக் கால் இழப்புக்குக் காரணம், கால் புண்களே. மரு–த்துவமனையில் அனுமதிக்கப்படும் நீரிழிவு நோயாளிகளில் 20 சதவீதம் பேர் கால் பா–திப்புகளுக்காகவே அனுமதிக்கப்படுகின்றனர். பாத பாதிப்பு ஏற்பட்டவர்களில் 20 -முதல் 50 சதவீதத்தினர் அடுத்த 5 ஆண்டுகளில் இதய பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு போன்றவற்றால் உயிரிழக்கின்றனர்.

கால் பாதிப்பு சின்னதாக இருந்தால்கூட, அதைக் குணப்படுத்த அதிக செலவுசெய்ய வேண்டிவரும். அதேவேளையில், இவர்கள் கொஞ்சம் விழிப்புடன் இருந்தால், பாதங்கள் பாதி–க்கப்படுவதைச் சுலபத்தில் தடுத்து விடலாம். இந்த விழிப்புணர்வு வரவேண்டும் என்பதற்காகவே, உலகின் பெரிய நகரங்களில் பாதங்களைப் பர–ாமரிப்பதற்கென்றே தனி கிளினிக்குகள் (குழுழுவ ஊடளைைஉள) நடத்தப்படுகின்றன.

### கால் பாதிப்பு – அறிகுறிகள்:

காலில் தொடு உணர்வு, வெப்ப உணர்வு குறைவது.

எரிச்சல், மதமதப்பு, ஊசி குத்தும் வலி.
கெண்டைக்கால் தசைகளில் குடைச்சல்.
பாதவெடிப்பு.
கால்ஆணி.
நகம் நிறம் மாறுவது.
தோல் நிறம் மாறுவது.
விரல் இடுக்குகளில் புண்.
கொப்புளம்.
ஆறாத புண்.
கால் வீக்கம்.

இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றிரண்டு தெரிந்தால்கூட உடனே மருத்துவரைப் பார்த்து விட்டால் நல்லது.

### கால் பாதிப்பு எப்படி ஏற்படுகிறது?

குருதியில் அதிக அளவு குளுக்கோஸ் தேங்கும்போது, அந்த அதீத குழுக்கோஸ் ‘சார்பிட்டால்’ எனும் வேதிப்பொருளாக மாறுகிறது. இது காலில் உள்ள புறநரம்புகளைச் சிறிது சிறி–தாக அரிக்கிறது. இதனால், காலில் தொடுஉணர்வு குறையத் தொடங்குகிறது. அப்போது காலில் முள் குத்துவதுகூடத் தெரியாது. பகலில் நடக்கும்போது பஞ்சுமெத்தையில் நடப்பது போன்று இருக்கும். போகப் போக, பாதங்களில் எரிச்சல் ஏற்படும். ஊசி குத்தும் வலி தொடங்கும். இந்த நிலைமைக்கு ‘டயபடிக் நியூரோபதி’ (Diabetic Nueropathy) என்று பெயர். இந்த நிலைமையில், காலில் அல்லது பாதங்களில் சின்னதாகப் புண் வந்தால்கூட அதை உணர முடிவதில்லை.

அடுத்து, இந்த நரம்பு பாதிப்பினால், பாத தசைகள் சுருங்குவதால், பாதத்–தில் அழுத்தம் அதிகமாகும். இதனால், ‘கால் ஆணி’ (ஊயடடரள) தோன்றும். புண்கள் ஏற்படும். மேலும், இவர்க ளுக்குப் பாதங்களில் வியர்வை குறைவாகச் சுரப்பதால், வெடிப்புகள் உண்டாகும். இந்த வெடிப்புகளில் தொற்றுக் கிருமிகள் சுலபத்தில் நுழைந்துவிடும். அப்போது வெடிப்பு–களில் சீழ் வைத்துவிடும்.

இவை தவிர, கட்டுப்பாடில்லாத நீரிழிவு நோயாளிகளுக்குக் கால்களுக்குச் செல்லும் குருதிக் குழாய்களும் பாதிக்கப்படும். இதனால், கால்களுக்குக் குருதி ஓட்டம் குறைந்து, கெண்டைக்கால் தசைகளில் குடைச்சல் ஏற்படும். கால் திசுக்களுக்குக் குருதி ஓட்டம் தடைபடுவதால், காலில் சிறிய அளவில் புண் வந்தால்கூட ஆறுவதற்குத் தாமதம் ஆகும். உயர் குருதி அழுத்தம் மற்றும் குருதி மிகைக் கொழுப்பு இருப்பவர்களுக்கு இந்தப் பாதிப்புகள் விரைவில் வந்துவிடும்.

புகைப்பழக்கம் இருப்பவர்களுக்கு, புகை பிடி–க்காதவர்களைவிட 100 மடங்கு அதிகமாக குருதிக்



குழாய் பாதிப்பு ஏற்படுவதால், அவர்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

நீரிழிவு நோயாளிகள் காலில் செருப்பு அணியாமல் நடக்கும்போது, முள், கல் போன்றவை குத்துவது தெரியாது. ஏதாவது லேசாக இடித்து விட்டால்கூட புண்ணாகிவிடும். இது தொடக்கத்தில் அவர்களுக்குத் தெரியாது. நாளடைவில், புண் பெரிதாகிச் சீழ் வைத்த பிறகு அல்லது குளிர்க் காய்ச்சல் வந்தபிறகுதான் தெரியவரும். அது பல சிக்கல்களை உருவாக்கும்.

### சேற்றுப்புண்

பாதங்களில் நிறைய வியர்வை கொட்டுமா–னால், ‘அத்லெட் ஃபுட்’ (Athlete’s foot) எனும் நோய் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இது ‘தினியா பீடிஸ்’ (Tinea pedis) என்று அழைக்கப்படுகிற நோய். பூஞ்சைக் கிருமி விரல் இடுக்குகளைத் தாக்கி இந்த நோயை ஏற்படுத்துகிறது. சேற்றுப்புண் என்று சொல்கிறோம் அல்லவா? இதுதான் அது.

வீட்டு வேலைகளுக்காகத் தண்ணீரில் அதிக நேரம் புழங்கும் பெண்களுக்கும், இறுக்கமான ஷூக்களை நீண்ட நேரம் அணிந்திருப்போருக்கும் விரல் இடுக்குகளில் பூஞ்சை வளரத் தேவையான சூழல் நிலவுகிறது. இதனால் இவர்களுக்குச் சேற்றுப்புண் வருகிறது.

### என்ன பரிசோதனைகள்?

கால்களில் பாதிப்பு இருப்பதை தொடக்கத்திலேயே தெரிந்துகொள்ள கீழ்க்காணும் பரிசோதனைகள் உதவுகின்றன.

தோலில் தொடு உணர்வு சரியாக இருக்கிறதா என்பதைக் கண்டறியும் நுண்ணிழைப் பரிசோதனை (ஆழழெகடையஅநவெ வுநளவ).

பாதங்களில் நரம்பு பாதிப்பு இருக்கிறதா என்பதை ஆரம்பத்திலேயே தெரிந்துகொள்ள உதவும் ‘பயோதிசியோமெட்ரி’ (Biothesiometry) பரிசோதனை.

(5ஆம் பக்கம் பார்க்க...)

# நீரிழிவு நோய் பாதங்களை பாதிப்பது ஏன்?...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கால்களுக்கு ரத்த ஓட்டம் சரியாக இருக்கிறதா என்பதை அறிய உதவும் ‘டாப்ளர் ஸ்கேன்’ (Doppler Scan) பரிசோதனை. பாதங்களில் அழுத்தம் சரியாக இருக்கிறதா என்பதை அறிய உதவும் ‘பீடோபோடோகிராஃப்’ (Pedopodograph) பரிசோதனை. இவற்றை ஆண்டுக்கு ஒருமுறையாவது செய்துகொள்ள வேண்டும்.

### பாதப் பராமரிப்பு

பெரும்பாலான நீரிழிவு நோயாளிகள் தங்கள் கால்பாதப் பராமரிப்பின் அவசியத்தை தொடக்கத்தில் உணர்வதில்லை. பாதங்களில் புண் அல்லது காயங்கள் வந்தபிறகு அவதிப்படுகின்றனர். இதைத் தவிர்க்க என்ன வழி?

### தினமும் கால்களைக் கவனியுங்கள்

காலையில் எழுந்ததும் அல்லது நடைப்பயிற்சி முடிந்ததும், பாதங்களைப் பரிசோதியுங்கள். கீழ்க்கண்ட அறிகுறிகள் ஏதாவது தெரிகிறதா எனத் தெரிந்துகொள்ளுங்கள்.

சிராய்ப்புகள், காயங்கள், கொப்புளங்கள்.

வெடிப்புகள், தோல் உரிவது, தோல் சுருங்குவது.

தோல் சிவப்பது, தோல் வீக்கம்.

தோல் நிறமாறுவது, தோல் கறுப்பாவது.

தோலில் சிறிய சிராய்ப்பானாலும் சரி, சிறிதளவு நிறமாற்றம் தெரிந்தாலும் சரி, உடனே மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்.

### கால் சுத்தம் மிக முக்கியம்!

முகத்தைப் பராமரிப்பது போன்று கால் மற்றும் பாதங்களைத் தினமும் காலை, மாலை இரு வேளை வெதுவெதுப்பான நீரால் சோப்புப் போட்டுக் கழுவி, ஈரம் போகத் துடைத்துச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். முக்கியமாக விரல் இடுக்குகளில் சுத்தம் செய்யவும். கால்களுக்கு அதிகச் சூடும் ஆகாது அதிக ஈரமும் ஆகாது. சூடு அதிகமானால், தோலில் கொப்புளம் வரும். ஈரம் அதிகமானால், விரல் இடுக்குகளில் பூஞ்சைத் தொற்று வரும். ஆகவே, கவனம் தேவை. முக்கியமாக, காலிலும் பாதத்திலும் சூடாக ஒத்தடம் தராதீர்கள், வீரியமான தைலங்களைத் தடவாதீர்கள்.

### தோலை ஈரப்படுத்துங்கள்

நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு நரம்பு பாதிப்பு ஏற்படுவதால் வியர்ப்பது குறைந்து, தோலில் வறட்சி ஏற்படும். இவ்வாறு வறண்ட தோலில் அரிப்பு, வெடிப்பு ஏற்பட்டுத் தொற்று உண்டாகலாம். இந்த மாதிரி தொந்தரவுகளைத் தவிர்க்க, தோலை அடிக்கடி ஈரப்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கு ஆலிவ் எண்ணெய் அல்லது பாரபின் எண்ணெயைத் தடவலாம். கால்களுக்கு குருதி ஓட்டத்தை அதிகப்படுத்த வேண்டியது முக்கியம். அதற்கு என்ன செய்வது?

கால்களுக்கு குருதி ஓட்டம் சரியாக இருந்தால்தான் கால் மற்றும் பாதங்களில் புண் ஏற்படாது. இதற்குக் கீழ்க்காணும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

இருக்கையில் அமருபோது கால்மேல் கால்போட்டு அமர வேண்டாம். மிகவும் இறுக்கமான காலுறைகளை அணிய வேண்டாம். தரையில் அமரும்போது, கால்களைக் குறுக்காக வைத்து அதிக நேரம் இருக்காதீர்கள். அப்படி அமர்ந்திருந்தால், குருதிக் குழாய்களுக்கு அழுத்தம் அதிகமாகி, குருதி ஓட்டம் தடைபடும். நரம்புகள் பாதிக்கப்படும்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் கணுக்காலையும் பாதங்களையும் அசைத்துக்கொண்டேயிருங்கள்.

### நகங்களை வெட்டும்போது கவனம்!

விரல் நகங்களைக் கடிக்காதீர்கள். நகங்களைக் கவனமாக வெட்டுங்கள். முக்கியமாக, பிளேடால் நகங்களை வெட்டாதீர்கள். நகவெட்டியால் வெட்டுங்கள். நகங்களை ஒட்ட வெட்டாதீர்கள். முக்கியமாக, ஓரங்களில் உள்ள நகங்களை வெட்டும்போது அதிக கவனம் தேவை.

### காலணியும் காலுறையும்

வெறுங்காலில் நடக்காதீர்கள். சரியான அளவுள்ள காலணிகளை அணியுங்கள். நீரிழிவு நோயாளர்களுக்கென்றே இப்போது காலணிகள் வருகின்றன. -முடிந்தால் அவற்றை வாங்கிப் பயன்படுத்துங்கள். விரல் நுனிகளை மூடும் வடிவத்தில் உள்ள காலணிகள் பாதுகாப்பானவை. குதிகால் உயரமற்ற காலணிகள் உகந்தவை. வீட்டிலும் காலணி அணிந்திருப்பதே நல்லது. ஈரமான காலணிகளை அணியாதீர்கள். பிளாஸ்டிக் காலணிகளைத் தவிர்க்கவும். ஷூக்களை அணிவதற்கு முன்பு சிறு கற்கள் போன்ற சிறு பொருள்கள் ஏதாவது இருக்கிறதா என்று சோதித்துவிட்டு ஷூக்களை அணியுங்கள். வியர்வையை உறிஞ்சும் பருத்தியினாலான காலுறைகளை அணியுங்கள். சரியான அளவுள்ள காலுறைகளை அணியவும். நைலான் வகைகளைத் தவிர்க்கவும்.

இரப்பர் மற்றும் எலாஸ்டிக் வளையங்கள் உள்ள காலுறைகளைத் தவிர்க்கவும். அவை காலுக்கு குருதி ஓட்டத்தைக் குறைக்கும். மெல்லிய காலுறைகள் நல்லது. தடித்த காலுறைகள் உரசும்போது காயங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், அவற்றைத் தவிர்க்கவும். பாதங்களுக்கு அவ்வப்போது மசாஜ் செய்வது நல்லது.

### கால் ஆணி – கவனம்

பாதங்களில் கால் ஆணி மற்றும் தோல்தடிப்பு இருந்தால், நீங்களாகவே பிளேடால் அல்லது கத்தியால் அறுத்து எடுக்காதீர்கள். இதற்கு மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

### புகைபிடிக்காதீர்கள்

புகையில் உள்ள நச்சுப்பொருள் குருதிக் குழாய்களை தடிக்கவைத்து, உட்சுவரை இறுக்கமாக்கிவிடும். இதனால், புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்குக் கால்களுக்குக் குருதி ஓட்டம் தடைபடும். இதனால், கால் புண்கள் ஆறக் காலதாமதம் ஆகும்.

### நடைப்பயிற்சி அவசியம்

தினமும் நடைப்பயிற்சி செய்யுங்கள். இது கால்களுக்கு குருதி ஓட்டம் சீராகச் செல்ல உதவும்.

### புண் ஆறத் தாமதம் ஏன்?

நீரிழிவு நோயாளிகளுக்கு மட்டும் காலில் புண் வந்தால் ஆற வெகு நாட்களாகிறது என்பதை அறிந்திருப்பீர்கள். இதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்வது நல்லது. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தத் தவறினால் அது குருதிக் குழாய்களையும் நரம்புகளையும் பாதிப்பதால், காலில் தொடு உணர்வும் வலி உணர்வும் குறையும். புண் இருக்கிற பகுதிக்குக் குருதி தேவையான அளவுக்குச் செல்வதில்லை. இதனால், புண் ஆறுவதற்கு உதவுகின்ற சத்துப்பொருள்கள் புண்ணுக்கு வந்து சேருவதில்லை.

புண் ஆறுவதற்குத் தரப்படும் மருந்துகளும் சரியான அளவுக்குப் புண் இருக்கிற இடத்திற்கு வந்து சேருவதில்லை. வலியும், தொடு உணர்வும் குறைவாக இருப்பதால் நோயாளிகள் பலருக்கு ஆரம்பத்தில் காலில் புண் இருப்பதே தெரியாமல், சிகிச்சை பெறாமல் இருக்கின்றனர். புண் பெரிய அளவில் வந்தபின்புதான் சிகிச்சைக்கே வருகின்றனர். மேலும், ரத்தச் சர்க்கரையும் இவர்களுக்கு அதிகமாக உள்ளதால் புண்ணில் இருக்கிற கிருமிகள் அந்தச் சர்க்கரையைச் சாப்பிட்டு நன்கு கொழுத்துவிடுகின்றன.

இது போன்ற பல காரணங்களால் சர்க்கரை நோயாளிகளுக்குக் காலில் புண் வந்தால் ஆற வெகு நாட்கள் ஆகின்றன.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கிழக்கு ஆளுநர் செந்தில் ஏற்பாட்டில் காத்தான்குடியில் நடைபெற்ற இப்தார்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வொன்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதில் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்ற உறுப்பினர்களான எச். எம் .எம் .ஹரீஸ் . அலி சாஹீர் மௌலானா ,நாடாளுமன்ற உறுப்பினர் முஷராப், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம். எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் , மலேசிய நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ,மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே முரளிதரன் உட்பட கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள் ,திணைக்களங்களின் தலைவர்கள் ,அதிகாரிகள், உலமாக்கள் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தாக்குதலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது குடும்பத்தவர்களின் உயிருக்கும் அது அச்சுறுத்தலாக அமையும். மேலும், இந்த தகவலை அரசியலுக்காக அல்லாமல், மிகவும் நேர்மையுடன் குறிப்பிடுகின்றேன் - என்றார்.

## மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை புறக்கணிக்கப் போகிறார்கள் எனவும் மீனவர்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

மேலும் ஏப்ரல் 8 இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மீனவர்கள், தங்களது வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை உள்ளிட்டவற்றைஒப்படைத்து போராட்டம் நடத்தவுள்ளனர்.

அதேவேளை எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்குள் மீனவர்கள் படகுடன் விடுதலை செய்யப்படாவிட்டால் தேர்தலில் வாக்களிக்காமல் தேர்தலை புறக்கணிக்கப் போகின்றனர் எனத் தீர்மானித்துள்ளனர்.

வேலை நிறுத்த போராட்டம் காரணமாக ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த புதன்கிழமை மீன் பிடிக்க சென்று இலங்கை கடற்படையால் ஐந்து படகுகள் பிடிக்கப்பட்டன. அதிலிருந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுயாழ்ப்பாணம்சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி 16 மீன் பிடிக்க சென்று இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள விசைப்படையின் ஓட்டுநர்கள் ஐந்து பேர் உட்பட 37 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியே இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தைத் தொடங்கியுள்ளனனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.

## இலங்கையர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மக்கள் சகலருக்கும் சம அந்தஸ்த்து கிடைக்கப்பெற வேண்டும், அதனால் நல்லிணக்கமும் மேம்படும் என்பதால் அதற்கான முயற்சிகளை சுகாதாரம் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படை விடயங்களிலிருந்து தொடங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இன்றைக்குஆறுவருடங்களுக்கு முன்னதாக வட மாகாணத்தின் 4 வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக வம்ட் (ரபுனிசிம்) நிறுவனம் சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திட்டிருந்து, இந்த நான்கு வைத்தியசாலைகளையும் கட்டமைப்பதற்கான செலவு 16 மில்லியன் யூரோவாகும் என கணக்கிடப்பட்டது எனவும் அந்த தொகையில் 25 சதவீதமான 4 மில்லியன் யூரோ செலவில் இந்த கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் கொவிட் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு நாடு முகம் கொடுத்திருந்ததைகருத்தில்கொண்டு முழுமையான அபிவிருத்தி கொடுப்பனவை 35 சதவீதமாக அதிகரிக்க நெதர்லாந்து அரசு தீர்மானித்திருந்தாகவும் அதனால் வட மாகாணத்தின் சுகாதார செயற்பாடுகளை பலப்படுத்துவதில் நெதர்லாந்து அரசு கொண்டிருக்கும் அரப்பணிப்பு வெளிப்படுவதாகவும் தெரிவித்தார்.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகமேலதிகவிசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



காலைக்கதிர் Kalaikkathir

# 136 உதவி ஆசிரியர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கல்

## மத்திய மாகாணத்தில்




மத்திய மாகாணத்தில் பல காலமாக இழுபறியில் இருந்த 136 உதவி ஆசிரியர்கள் வெள்ளிக்கிழமை நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமேஷ்வரன் ஆகியோரின் வேண்டுக்கோளுக்கமைவாக, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இதற்கான நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை ஆகியன காரணமாக இவர்களுக்கான நியமனங்களை வழங்குவதில் பல இழுபறி நிலைமைகள் மற்றும் அவர்களால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களில் சில குளறுபடிகள் காரணமாகவும் நியமனம் வழங்குவதில் இந்தத் தாமதம் ஏற்பட்டது.

இதனையடுத்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் ஆகியோரின் நேரடி தலையீட்டின் காரணமாக 136 ஆசிரியர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வ ரன் கருத்து தெரிவித்தவை வருமாறு -

மலையகத்தில் பெரும் தலைவரான மறைந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் இருந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் பல்வேறு சவால்களையும் தாண்டி அவர்கள் ஆசிரிய தேவைக்கு உள்வாங்கப்பட்டார கள். இருப்பினும் இன்னும் 270 ஆசிரியர்களுடைய ஆவணங்கள் முறையாக இல்லாமல் இருப்பதன் காரணமாக அவர்களுடைய நியமனங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, அவர்களின் ஆவணங்களை சரி செய்து விரைவில் அதற்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பொறுப்பு வாய்ந்ததுறை அமைச்சராக இருந்தும் இதற்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்காமல் தற்போது பெயர் போடும் அரசியலில் சிலர் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இவ்வேளையில் அமைச்சர் ஜீவன் தொண்டமானும், நானும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமியும் தொடர்ச்சியாக ஆளுநரிடம் கலந்துரையாடி அழுத்தங்களைக் கொடுத்ததன் காரணமாகவும், ஆளுநரின் நேரடி தலையீட்டின் காரணமாகவும், மத்திய மாகாண பிரதம செயலாளர் மற்றும் மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் இடைவிடாத உழைப்பின் காரணமாக இந்த நியமன கடிதங்கள் இன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு பங்களிப்பு வழங்கிய அரசியல் தலைமைகளுக்கும், அதிகாரிகளும் மற்றும் நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன், இந்த ஆசிரிய சேவையை வெறும் தொழிலாக பார்க்காமல் எமது எதிர்கால தலைமுறையினரை வழிப்படுத்தும் ஒரு சேவையாக வழங்கி மாற்றத்தை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ராமேஷ்வரன், கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குணதிலக்க ராஜபக்ஷ, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மத்திய மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி பணிப்பாளர், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# இளம் கலைமாணி 3 ஆம்வருட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம்







(தில்சாத் பர்வீஸ்)

சமூகப் பணி பயிலும் மூன்றாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை தேசிய சமூக அபி விருத்தி நிறுவனத்தில் சமூகப்பணி பாடசாலையின் விரிவுரையாளர் ரி.தர்ஷனின் வழிகாட்டலின் கீழ் மற்றும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பொது பணிப்பாளர் டாக்டர் ரவீந்திர குமார அனுமதியுடன் இடம்பெற்றது.

இந்த இலவச மருத்துவ முகாமின் நோக்கமாக சீதுவ லியானகேமுல்ல பிரதேச மக்களுக்கான ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்டது.

நிகழ்வின் பிரதம அதிதியாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப்பணி பாடசாலையின் பணிப்பாளர் வரதராஜா ஜெயஷரூபன் மற்றும் அதிதிகளாக சீதுவ பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரவி சில்வா, எவ்பிஏ நிறுவனத்தின் மருத்துவ இயக்குநர் டாக்டர் நுஸ்ரத் நசூர்தின் மற்றும் நாரயம்பிட்ட இரத்த வங்கி மருத்துவ அதிகாரிகள் ஏனைய மருத்துவ அதிகாரிகள் விரிவுரையாளர்கள் கல்விசார் கல்விசாரா ஊழியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் பங்குதாரர்களாக பன்னீர்ச் செல்வகரன் , தங்கவேல் வாகிசன், இந்திரலிங்கம் யுகதீபன், கிஷ்ண குமார் கேகயன், திரவியம் டிலக்சன், நற்குணம் சோபன், பிள்ளயான் தயேந்திரன், பிள்ளையான் ருவேந்திரா, சோதிலிங்கம் கபிலன், ரவீந்திரன் ராகவேந்திரன் உதவிகளுடனும் ஊடகப் பங்காளராக ஆர் ஜே மீடியா கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

# சர்வதேச நீர்தினத்தை முன்னிட்டு விவசாயிகளின் விசேட பூசைகள்





(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச நீர் தினமான வெள்ளிக்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியின் விவசாயிகளால் விசேட பூசை நிகழ்வொன்று வெம்பு பகுதி வயல் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டது. கடும் மழையுடனான கால நிலையில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி நிகழ்வை தம்பலகாமம் பிரதேச விவசாய சம்மேளனங்கள், பிரதேச செயலகம், கமநல அபிவிருத்தி திணைக்களம், நீர்பாசன திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது குறித்த வயல் வெளிக்கு அருகில் உள்ள பிச்சைவெளி ஆற்று ஓடையில் பூஜை மேற்கொள்ளப்பட்டு தீர்த்தம் செய்து விட்டனர்.

மிக நீண்ட நாள்களின் பின் கனமழை பெய்ததால் விவசாயிகள் கடும் சந்தோசம் வெளியிட்டனர்.

இதன் போது பொங்கல் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டு விசேட பூஜையும் இடம்பெற்றதுடன் பொங்கலும் பகிரப்பபட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி,நீர்ப்பாசன திணைக்களத்தின் கந்தளாய் பிரதேச பொறியியலாளர் எஸ்.ஏ.சி.எஸ்.சுரவீர உட்பட கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்த திருமலை இந்து மாணவனுக்குக் கௌரவம்





(ஹஸ்பர் ஏ.எச்)

2024-03-05 ஆம் நாள் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனை படைத்த திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஹரிகரன் தன்வந்தைக் கனடா திருக்கோணமலை நலன்புரிச் சங்கம் ஓர் லட்சம் ஷரூபா பரிசுத் தொகையும் வெற்றிக் கிண்ணமும் வழங்கிக் கௌரவித்தது.

கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் க.இரகுநாதனும் அதன் காப்பாளரும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவருமாகிய சண்முகம் குகதாசனும் இவற்றை வழங்கினர்.

2024-03-20 ஆம் நாளாகிய இன்று திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் மாணவர் ஒன்றுகூடலின் பொழுது இந்தக் கௌரவிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர், துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தன்வந்தின் பெற்றோர் உள்ளடக்கிய பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் பொழுது உரை ஆற்றிய சண்முகம் குகதாசன் இச்சாதனை புரிந்த மாணவன் நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்திருப்பதாகவும் மேன்மேலும் முன்னேறி ஒலிம்பிக் வரை செல்ல வேண்டும் எனவும் வாழ்த்தினார்.

(05)

# யாழ். பல்கலை மாணவரின் ஆடல் அரங்க நிகழ்வுகள்

யாழ் இந்திய துணைத் தூதரகம் - யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறையுடன் இணைந்து பட்டப்படிப்பு மாணவர்களின்

ஆய்வு அரங்கை முன்னிட்டு வழங்கும் ஆடல் அரங்கம் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்தியாவின் பிரபல பரதநாட்டிய கலைஞர் கலைமாமணி முனைவர் எம்.எஸ். சரளாவின் நெறியாள்கையில் அவரது மாணவி தேவியின்

சிறப்பு பரத நாட்டிய நிகழ்வுடன் யாழ்ப்பாண பல்கலைகழக நடனத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் நடன நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது சப்பதிகார ஆடல், தில்லானா ஆகிய நடனங்கள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.இந்திய துணைத் தூதரக பதில் தூதர் ராம் மகேஷ், வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களுடன் கூட்டம்



(எம். எப். றிபாஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற் குழு கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிஷாத் பதியுத்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயற் குழுவின் உயர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும், மாவட்ட ரீதியாக கட்சி மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

(05)

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விபத்து - அவசர சிகிச்சைப் பிரிவு திறப்பு







யாழ்ப்பாணம்- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திறந்து வைக்கப்பட்டது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திறந்துவைக்கப்பட்டது.


இந் நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சீதா அறம்பொட, சுரேன் ராகவன், வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நவநாத சித்தரின் 122ஆவது குருபூஜை நிகழ்வுகள் இன்று




(வி.ரி. சகாதேவராஜா)

மலையகத்தின் பிரசித்திபெற்ற நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி நவநாத சித்தரின் 122 ஆவது குருபூஜை அவரது ஆலயத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நவநாத சித்தரோடு இலங்கை வந்து காரைதீவில் சமாதியான சித்தானைக்குட்டி சுவாமி ஆலய நிர்வாகத்தினரும் கலந்து கொள்ள நேற்று பயணமாகினர். நவநாத சித்தர் 1902. 03.24 இல் பங்குனி உத்தரநாளில் நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்டத்தில் சமாதி அடைந்தார்.

நாவலப்பிட்டி நகரில் இருந்து 19 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் தான் குயின்ஸ் பெரி. இங்கு தான் நவநாத சித்தர் ஆலயம் அமைந்துள்ளது.

ஒரே நேரத்தில் ஒன்பது இடத்தில் இருக்கும் வல்லமைக் கொண்ட நவநாத சித்தரின் இலங்கை வருகை முற்றிலும் சுவாரஸ்யமானது. நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்ட பெரியக் கங்காணி இந்தியாவில் இருந்து வருகை தந்தவர். அவரும் அவர் மனைவியும் இந்தியாவில் இருந்து இலங்கை வரும் போது நவநாத சித்தர் கங்காணியின் மனைவியிடம் எங்கே செல்கிறீர்கள் என வினவியுள்ளார், தாங்கள் இலங்கைக்கு செல்வதாக அவர் கூறியதும் தானும் அவர்களுடன் வர புறப்பட்டாராம் நவநாத சித்தர்.

ஆனால் கங்காணியின் மனைவி தாங்கள் மலைநாட்டுக்கு செல்வதாகவும் அதிக குளிர், மழை நிறைந்த இடம் என்று கூறி நீங்கள் அங்கு வந்து காலநிலையை சமாளிக்க மாட்டீர்கள் என அவரை அங்கேயே விட்டுவிட்டு வந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் தலைமன்னார் வந்தடைந்த வேளையில் நவநாத சித்தரும் தலைமன்னாரை வந்திருப்பதை பார்த்து வியந்து போயுள்ளனர் கங்காணி குடும்பத்தார்.

இவர்களுடன் குயின்ஸ்பெரி தோட்டத்தை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தார் நவநாத சித்தர். அங்கே சென்று வனாந்தரத்தில் கற்குகை ஒன்றில் தங்கியிருந்து தவம் செய்தார். அவர் தங்கியிருந்த குகை அருகே தேயிலை மலைக்கு வேலைக்கு செல்லும் பெண்கள் தங்களின் குழந்தைகளை விளையாட விட்டு செல்வது வழக்கமாம். அப்படி குழந்தைகளை விட்டுச் சென்றபோது அதில் ஒரு குழந்தை அவரை பார்த்து வரைந்ததாகவும் அங்குள்ள மக்கள் சொல்கி றார்கள். இன்றுவரை அந்த நிழற்படம் இவ் ஆலயத்தில் இருப்பதுடன் நவநாத சித்தர் இப்படித்தான் இருந்திருப்பார் என்பதையும் இன்றைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள உதவியாகவும் உள்ளதாக சொல்கிறார்கள்.

தை மாதத்தில் வனபோசன நிகழ்வு நடைபெறுகிறது.

இந்த வனபோசன நிகழ்வு மிகப் பிரசித்தமானது. வழிபாடு செய்து இந்த வனபோசனத்தில் கொடுக்கப்படும். உணவை உண்டால் குழந்தைப்பாக்கியம் கிடைக்கும் என்பது பலரது நம்பிக்கை, பலர் குழந்தைப்பேறு இன்றி நவநாதசித்தரை தரிசித்தமையால் அவரின் அனுக்கிரகத்தால் குழந்தைப்பேறு பெற்றுள்ளனர் எனத் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

நவநாத சித்தர் சமாதி அடைந்த இடத்தில் ஒரு லிங்கம் தானாகவே தோன்றியதாகவும் அந்த லிங்கம் இன்றுவரை வளர்ந்து வருவதாகவும் மக்கள் நம்புகிறார்கள்.

(05)

# கல்முனையில் நடைபெற்ற உலக சிறுநீரக தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் உலக சிறுநீரக தினத்தினையொட்டி இந்நிகழ்வானது வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வைத்தியசாலையின் குருதி சுத்திகரிப்பு பிரிவினரின் ஏற்பாட்டிலும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி என்.மனோஜினி வழங்கியதோடு தலைமை உரையை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் வழங்கியிருந்தார்.

மேலும் வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் எம்.என்.எம். சுவைப்பினால் சிறுநீரக நோய் பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில் சிறுநீரகத்தின் தொழிற்பாடு, அதனுடன் தொடர்புபட்ட நோய்கள், அறிகுறிகள் முக்கியமாக இதற்கான சிகிச்சை முறைகள் மருந்துகள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கமாக விவரித்தார். இதனை தொடர்ந்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தரான எஸ். சந்திரகுமாரினால் சிறுநீரக நோயால் பாதிப்புற்றோருக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள், இலவச கொடுப்பனவுகள் அவற்றை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் என்பன பற்றிய தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டது. மேலும் வைத்தியசாலையின் போஷணையாளர் சாமில் பௌஷாத் அவர்களினால் எவ்வாறான உணவுபழக்கங்களினால் சிறுநீரக நோய் ஏற்படுகிறது மற்றும் சிறுநீரக நோயை ஏற்படுவதை தடுக்க எவ்வாறான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்ற பலவகை விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும் இறுதி நிகழ்வாக, நன்றியுரையினை குருதி சுத்திகரிப்பு பிரிவு தாதிய உத்தியோகத்தர் உதயதாஸ் ஐயர் அவர்களால் வழங்கப்பட்டு நிகழ்வு நிறைவுற்றது. மேலும் நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் தாதிய பரிபாலகர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், ஒட்டோ சாரதிகள் சங்க உறுப்பினர்கள், சிறுநீரக நோயாளிகள், மற்றும் நோயாளிகளின் உறவினர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். நிகழ்ச்சியினை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. மே.மனோஜினி தொகுத்து வழங்கியிருந்தார். (05)

# கடும் வெப்பம் காரணமாக பறிபோனது ஒருவர் உயிர்

கடும் வெப்பமான வானிலை காரணமாக சைக்கிளைச் செலுத்திய ஒருவர் வெள்ளிக்கிழமை திடீரென தரையில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 72 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள வெப்பமான காலநிலையிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய மழையுடனான வானிலை ஐந்து நாளகளுக்கு நீடிக்கும் என்றும் வெப்பமான வானிலை மீண்டும் உருவாகலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# மதனமோதகம் போதைப் பொருள் சாவகச்சேரியில் சிக்கியது

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரால் 72 கிலோகிரோம் எடையுடைய மதனமோதகம் போதைப்பொருள் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை அமைப்பின் இயக்குநர் என்றவாறு அடையாளப்படுத்தப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டிய வாகனத்தில் பயணித்த நபரொருவருடன் இப்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது . யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களை இலக்குவைத்தே இப்போதைப்பொருள் கொண்டுவரப்பட்டிருக்கலாமென்று கூறப்படுகின்றது . (05)

# வீடு புகுந்து தகராறு செய்த ஆறு பேர் குடாநாட்டில் கைது

யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் புகுந்து தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாவடி பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக வியாழக்கிழமை தகராறில் ஈடுபட்டவர்களை வீட்டின் உரிமையாளர் , வீட்டின் முன் நின்று தகராறில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

அதனால் கோபமடைந்த அவர்கள் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து உரிமையாளருடன் தகராறில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அறுவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(05)

# 12 வீதமான முதியவர்களுக்கு நாட்டில் பற்கள் இல்லையாம்

**சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன கருத்து**

*நாட்டிலுள்ள 12 சதவீதமான முதியவர்கள் அனைத்தை பற்களையும் இழந்துள்ளனர் என சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.*

*இதனை உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் தெரிவித்துள்ளார்.*

*பல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை பாடசாலை மட்டத்தில் கற்பிக்க வேண்டும். வாழ்நாள் முழுவதும் வாய் பல் ஆரோக்கியத்தை சரியாக பேணுவது முக்கியம். நாட்டில் இன்று ஏராளமானோர் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.*

*இதுபோன்ற நோய்களைத் தடுக்க சரியான சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவது அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.*

*(05)*

# மின்விசிறி கழன்று விழுந்து இரு மாணவர்கள் காயம்

கண்டி, அஸ்கிரியவில் உள்ள பாடசாலையொன்றில் வெள்ளிக்கிழமை ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் இரு மாணவர்கள் மீது மின்விசிறி வீழ்ந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த இரு மாணவர்கள் கண்டி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒரு மாணவனுக்கு கண்ணிலும், மற்றைய மாணவனுக்கு தலையிலும் காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், கடந்த சில நாட்களாகவே மின்விசிறி மின் வயரில் சிக்கிய நிலையிலேயே சுழன்றதாகவும், இது குறித்து பாடசாலை நிர்வாகத்திடம் கூறியும் சரி செய்ய எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என பெற்றோர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம்

(நூருல் ஹுதா உமர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் 2023 விழா மற்றும் கண்காட்சி வியாழக்கிழமை பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கலை கலாசார பீட மொழித்துறை ஏற்பாட்டில், துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீகருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஜி. விக்னேஸ்வரன் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி மனோகரன் அதிதி உரையாற்றியதுடன் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர் சதானந்தன், தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் மதிவேந்தன் பட்டதாரி கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கென்னடி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பாளரின் சொற் களஞ்சியம் ஆகிய தலைப்புகளில் மென்பிரதி நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டதுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் அஷ்ரப் நூல் திறனாய்வு உரையை நிகழ்தினார்.

விழாவின் மற்றொரு முக்கிய அம்சமாக நடைபெற்ற மொழிபெயர்ப்பு தொடர்பான விடயங்கள் அடங்கிய கண்காட்சியை கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஆரம்பித்து வைத்தார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வின்போது அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

# புத்தளம் – ஆனமடுவவலி விபத்து பெண் ஒருவர் பரிதாபகரச் சாவு









ஆனமடுவ பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிரைத பிறபகல் புத்தளம் - ஆனமடுவ பிரதான வீதியில் கல்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஆனமடுவ பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற லொறியுடன் புத்தளத்திலிருந்து ஆனமடுவ நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர்களை உடனடியாக அங்கிருந்தவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முறபட்டபோதே மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ வெம்புவெள சியம்பலாகஸ்வெள பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், விபத்தில் காயமடைந்த மேலும் மூன்று பேர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதை தொடர்ந்து, அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும், உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கனடாவில் வசிக்கும் இலங்கைக் குடும்பத்தினால் சுகாதாரத் துறைக்கு 47 கோடி ரூபா நன்கொடை

## சுகாதார அமைச்சரிடம் கையளிப்பு



470 மில்லியன் ஷரூபா பெறுமதியான அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தீவிர சிகிச்சை பிரிவுக்கான157 படுக்கைகள் இந்த வாரம் (மார்ச் 21) சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த படுக்கைகள் கனடாவில் வசிக்கும் இலங்கை குடும்பம் ஒன்றால் சீதுவையில் உள்ள சுபுவத் அரணாவின் இயக்குநரும் நிறுவனருமான அருட்தந்தை டாரல் கூங்கேவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுகாதார அமைச்சகத்தின் தகவலின்படி, ஐசியு படுக்கைகள் ஒவ்வொன்றும் 3 மில்லியன் ஷரூபா பெறுமதி வாய்ந்தவை என்பதுடன், 34 அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு, ராகம போதனா வைத்தியசாலை, சிலாபம், புத்தளம், சீதுவ, கம்பஹா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய மருத்துவமனைகளுக்கு இந்த ஐசியு படுக்கைகள் வழங்கப்பட உள்ளன.

நன்கொடையை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, கனடாவில் வசிக்கும் பட்ரிக் நீல்கமல் பெர்னாண்டோ மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மிகவும் தேவையான நன்கொடைக்காக நன்றி தெரிவித்தார். (05)

# தாய்ப்பால் புரைக்கேறியதில் 28 நாள்களான சிசு உயிரிழப்பு

தாய்ப்பால் புரைக்கேறியதில் பிறந்து 28 நாள்களேயான சிசு ஒன்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளது.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சசிகுமார் பிரதீபா என்ற பெண் சிசு உயிரிழந்துள்ளது.

வெள்ளிக்கிழமை தாயார் சிசுவுக்கு பாலூட்டிக் கொண்டிருந்த சமயம் சிசு மயங்கி உள்ளது.

இதனைத் தொடர்ந்து உடனடியாக மதியம் 12.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிசுவை கொண்டு சென்ற போது சிசு ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (05)

# 20 லட்சம் ரூபா பெறுமதியுடைய கேரளகஞ்சாவுடன் ஒருவர் கைது

## கிளிநொச்சியில் பொலிஸ் நடவடிக்கை

கிளிநொச்சியில் கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் 07 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை உருத்திபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

வடக்கு கடற்படை கட்டளை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரால் ஒருங்கிணைந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது உருத்திபுரம் பகுதியில் சுற்றித்திரிந்த நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில் அவரிடமிருந்த நான்கு கேரள கஞ்சா பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்படி கைதுசெய்யப்பட்ட அவரிடமிருந்த 07 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டன என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு இரண்டு மில்லியன் ஷரூபா என குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சியை வசிப்பிடமாக கொண்ட 29 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அத்தோடு குற்றஞ்சாட்டப்பட்டவர் கேரள கஞ்சாவுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# எல்பிட்டி கால்வாயில் ஆணின் சடலம் மீட்பு

எல்பிட்டி, மிரிஸ்வத்த பிரதேசத்தில் உள்ள கால்வாயொன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக எல்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சடலம் மிகவும் அழுகிய நிலையில் காணப்பட்டதால் உயிரிழந்தவர் தொடர்பான தகவல் இதுவரை கண்டறிப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரணமானது கொலையா , தற்கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பின்னவல யானைகள் சரணாலயத்தில் பிறந்தது 76 ஆவது யானைக் குட்டி



பின்னவல யானைகள் சரணாலயத்தில் 76 ஆவது யானைக் குட்டி பிறந்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதியே இந்த யானைக்குட்டி பிறந்துள்ளது.

32 வயதுடைய காந்தி கெனேரட மற்றும் 19 வயதுடைய பண்ட்டு அஸ்தியாட ஆகிய யானைகளுக்கே இந்த யானைக் குட்டி பிறந்துள்ளது.

வனப்பகுதிகளில் காணப்படும் அநாதை யானைகளைப் பராமரிப்பதற்காக 1975 ஆம் ஆண்டு வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்தால் பின்னவல யானைகள் சரணாலயம் ஆரம்பிக்கப்பட்டது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2024இல் வெளியிடப்பெற்றது